# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 2024 ஆம் ஆண்டு ஜீன் வெள்ளி கிழமை 14ம் நாள் சாட்சியாகிய ஜெயந்தி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி.மம்தா, Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயந்தி | வயது | 48 |
| க/பெ. | கோவர்தனன் | இனம் | பெண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.5 /2021**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் ஆஜர்.)

<u>குறுக்கு விசாரணை 14.06.2024 ம.சா.1</u>

1. எதிர்மனுதாரர் கோவர்தனனின் முதல் மனைவி பெயர் மோகனா. எனது முதன்மை சாட்சியத்தில் எதிர்மனுதாரரை கொடுமை செய்ததால் அவரது முதல் மனைவி தூக்கு போட்டு இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் இரண்டாவது மனைவி பெயர் நாகபூசணம்.

2. 2வது மனைவி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2 மனைவிகள் இறந்து பிறகு நான் 3வதாக எதிர்மனுதாரரை நான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெறும்போது எதிர்மனுதாராருக்கு முதல் மனைவி மூலம் கிருஷ்ணமூர்த்தி என்கிற மகனும், இரண்டாவது மனைவி மூலம் யமுனா என்ற மகளும் இருந்தார்கள் என்றால் சரிதான்.

3. எனது முதன்மை சாட்சியத்தில் பல வருடங்களாக எதிர்மனுதாரருடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனை வருடம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன் என்றால் 20 வருடமாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். முதல் மனைவிக்கும், இரண்டாவது மனைவிக்கு பிறந்த பிள்ளைகளை நான் சரியாக பார்த்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

4. சாயாவதி என்பவர் யார் என்றால் எனது அக்கா. எனது முதல் சாட்சியத்தில் எனது அக்கா சாயாவதிக்கு வசதி இல்லை என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சாயாவதிக்கு பாராமரிக்க வசதி உள்ளது. நானும் எனது மகளும்

சாப்பிடமால் கஷ்டப்பட்டு வருவதாக 10வது பத்தியில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

5. சாயாவதியின் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் திருமணமான 2 மாதத்தில் எனது அக்காவை விட்டுவிட்டு சென்றுவிட்டார். சாயாவதி வேலை செய்து வருமானம் ஈட்டி வருகிறாரா என்றால் டிபன் கடை வைத்திருந்தார். தற்போது வயது ஆகிவிட்டதால் கம்மி செய்துவிட்டார். வீட்டில் கடை வைத்துள்ளாரா என்றால் இல்லை. தனியாக கடை வைத்துள்ளார். வளர்புரம் கிராமத்தில் கடை வைத்துள்ளார்.

6. சாயாவதி வருமன வரி செலுத்தி வருகிறாரா என்றால் இல்லை. சாயவதிக்கு வருமானம் இல்லாதபோது எனக்கு மனுவில் தெரிவித்துள்ளவாறு நகைகள் மற்றும் சீர்வரிசை கொடுத்து திருமணம் செய்து வைத்தாக தெரிவித்தது பொய் என்றால் சரியல்ல. சாயாவதி எனக்கு பணம் கொடுப்பாரா என்றால் எனக்கு தேவை என்று கேட்டால் கொடுப்பார். எனக்கு எவ்வளவு தொகை கொடுப்பார் என்றால் ரூபாய்.50 ஆயிரம் கேட்டாலும் கொடுப்பார், சாயாவதிக்கு வசதி இல்லை என்று தெரிவித்துவிட்டு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல,

7. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் எதிர்மனுதாரருக்கு இருதய அறுவை சிகிச்சை மற்றும் இரண்ணிய சிகிச்சை செய்தாக தெரிவித்திருந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அவரை வந்து பார்த்து கொள்ளும்படி என்னை பதில் அறிவிப்பு மூலம் அழைத்து இருந்தார் என்றால் சரிதான்.

8. 29.06.2020 ம் தேதி நான் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் மூலம் மற்றொரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு நகல் எனது வழக்கறிஞர் அனுப்பியது என்றால் சரிதான். (**29.06.2020 ம் தேதியிட்ட மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பு நகல் எ,சா,ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

9. எ.சா.ஆ.1 அறிவிப்பில் நான் சேர்ந்து வாழ்வதாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் மனை வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 13.07.2020 ம் தேதி எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் எதிர்மனுதாரர் உடல்நிலை சரியில்லை என்றும் சேர்ந்து வாழ வரும்படி தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு எதிர்மனுதாரர்

அனுப்பியது தான். **(13.07.2020 ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பு, அலுவலக நகல் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**,

10. 27.07.2020 ம் தேதி நான் கூடுதல் அறிவிப்பு நான் அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு நகல் எனது வழக்கறிஞர் அனுப்பியது தான். **(27.07.2020 ம் தேதியிட்ட மனுதாரர் வழக்கறிஞர் கூடுதல் அறிவிப்பு நகல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி அறிவிப்பிலும் நான் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளதாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழாததற்கு எனது அறிவிப்பில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

11. 10.08.2020 ம் தேதி எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிலும் எதிர்மனுதாரர், என்னை சேர்ந்து வாழ அழைத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு எதிர்மனுதாரர் அனுப்பியது என்றால் சரிதான். (10.08.2020 **ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பு, அலுவலக நகல் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**,

12. நான், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ பஞ்சாயத்து பேசினேனா என்றால் எதிர்மனுதாரர் பஞ்சாயத்திற்கு வரவில்லை. எந்த தேதியில் பஞ்சாயத்து வைத்தேன் என்றால் ஞபாகம் இல்லை. அறிவிப்பு அனுப்பிய பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து பஞ்சாயத்து வைத்தேன் என்றால் ஒரு வாரம் கழித்து வைத்தேன். முதலில் அறிவிப்பு அனுப்பிய பிறகு ஒரு வாரத்தில் பஞ்சாயத்து வைத்தேனா என்றால் ஆமாம். எந்த இடத்தில் பஞ்சாயத்து நடந்தது என்றால் ஊர் பெரியவர்களை அழைத்தேன். பெயர் ஞபாகம் இல்லை.

13. நான் அனுப்பிய 3 அறிவிப்புகளிலும் எதிர்மனுதாரரை பஞ்சாயத்திற்கு அழைத்து அவர் வரவில்லை என்று தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் பஞ்சாயத்திற்கு வரவில்லை என்று தெரிவித்தேனா என்றால் இல்லை. எனது அறிவிப்பிலும் சொத்து வேண்டும் என்றுதான் கேட்டுள்ளேன் என்றால் எனது சொத்தை தான் கேட்டேன்.

14. நான் சொத்திற்காக சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சொத்து தான் முக்கியம் என்றாலும், மனைவியாக கணவனை பார்த்துகொள்ள விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ்ந்தால் சொத்துக்கள் எனக்கு தான் கிடைக்கும் என்றால் என்

பெயரில் உள்ள சொத்து எனக்கு தான் சொந்தம். நான் தான் விருப்பம் இல்லாம்மால் வெளியே வந்து விட்டேன் என்றால் சரியல்ல. பாப்பாநாயுடு பேட்டையில் எதிர்மனுதாரர் என் பெயரில் சொத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனது அம்மா வீட்டில் வாங்கினார்கள்.

15. எனக்கு திருமணமாகி எத்தனை நாட்களில் எனது அம்மா இறந்தார் என்றால் எனது திருமணத்திற்கு முன்பே இறந்துவிட்டார். எனக்கு திருமணமாகி எத்தனை வருடம் கழித்து பாப்பாநாயுடுபேட்டையில் சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. எனது அம்மா வீட்டில் சொத்து வாங்கி கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை.

16. 2 வது மனுதாரர் எனது மகள் என்றால் சரிதான். என் மகள் வேலை செய்யும் நிறுவனத்தில் சம்பளம் வங்கி மூலம் செலுத்துகிறார்களா என்றால் எனது மகள் வேலை செய்யவில்லை. எனது மகள் எந்த வருடம் படிப்பை முடித்தார் என்றால் இந்த வருடம் தான் தேர்வு எழுதியுள்ளார். எனது மகள் சென்ற வருடம் படிப்பை முடித்துவிட்டார் என்றாலும் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

17. திருமால்பூரில் உள்ள கிருஷ்ண ஸ்வீட்ஸ் கடை எதிர்மனுதாரின் அண்ணனுக்கு சொந்தமானது என்றால் இல்லை. அந்த கடையில் எதிர்மனுதாரர் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் அந்த கடையில் வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த கடையை தற்போது இடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

18. எதிர்மனுதாரர் என்னை வீட்டை விட்டு வெளியேற்றிய போது அக்கம் பக்கத்தார் கேட்டதாக முதல் விசாரணையில் தெரிவித்துள்ளது போல் யார் கேட்டார்கள் என்றால் பெயர் தெரியாது. எனது சொந்தக்காரர்கள் யார் என்றால் எனது உறவினர் ராணி கேட்டார். அவர் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிப்பாரா என்றால் அவர் வெளிநாடு சென்றுள்ளார். அவர் ஊருக்கு வந்தால் சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். ராணியின் கணவர் பெயர் ரகுபதி.

19. நான் எதிர்மனுதாரர் அடித்தாக போலீசில் புகார் அளித்தேனா என்றால் காவல் நிலையம் சென்றேன். எதிர்மனுதாரர் பணம் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் நீதிமன்றம் வந்துள்ளேன். நான் எதிர்மனுதாரருடன் திருமால்பூர் இரயில்வே ஸ்டேசன் அருகே மூன்று மாடி கட்டிடத்தில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான்

இரண்டாவது மாடியில் வசித்து வந்தேன். நான் எதிர்மனுதாரருடன் வசித்து வந்தபோது அவர் தான் எனக்கு துணிமனிகள் எடுத்து தந்தார் என்றால் ஆமாம். மளிகை சாமன்களை அவர்தான் வாங்கிகொடுத்தார் என்றால் சரிதான் மனுவில் தெரிவித்துள்ளவாறு கொரோனா காலத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் என்னை நன்றாக பார்த்துகொண்டார் என்றால் சரிதான்.

20. எந்த தேதியில் என்னை வீட்டை விட்டு வெளியேற்றினார் என்றால் தேதி தெரியாது. 20 பேர் என்னை அடித்து வெளியேற்றினார்கள். நான் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஊரடங்கு இருந்ததால் வீட்டிற்கு சென்று விட்டேன். என்னை 20 நபர்கள் அடித்து இருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருப்பேன் என்றாலும், இல்லை என்பதால் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

21. நான் 65 சவரன் நகையை வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து வேண்டும் என்று எதிர்மனுதாரரை தொந்தரவு செய்தேன் என்றால் இல்லை. பிரச்சனை செய்வதற்காக நானும், எனது மகளும் வீட்டை விட்டு சென்று விட்டோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னையும், எனது மகளையும் நல்ல முறையில் பாரமரிக்க தயாராக உள்ளார் என்றால் வீட்டை அவரது பெரிய மகனுக்கு எழுதி கொடுத்துவிட்டார். நான் எந்த வீட்டில் வசிப்பது. எதிர்மனுதாரர் என்னுடன் வசித்த வீட்டில தனியாக தான் வசித்து வருகிறார் என்றால் வீட்டை மாற்றினால் தான் வசிக்க முடியும். வீட்டை எனது பெயரில் எழுதினால் நான் வசிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

22. மனைவி என்ற முறையில் நான் வயதான எதிர்மனுதாரரை பார்த்து கொள்ள வேண்டும் என்றால் எனக்கும் உடலில் பிரச்சனை உள்ளது. எனக்கு உடலில் பிரச்சனை உள்ளதற்கு ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாப்பாநாயுடு பேட்டையில் உள்ள சொத்து ஒரு கோடிக்கு மேல் செல்லும் என்றால் அது எனது அம்மா வீட்டில் வாங்கி கொடுத்தது.

23. எனக்கு போதுமான சொத்து ஆதரவு கொடுத்துள்ளதால் எனக்கு ஜீவானம்சம் கிடைக்க கூடியது இல்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுப்பதால் மனுவில் கோரியவாறு பரிகாரம் பெற தகுதியுடையவர் இல்லை என்றால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை; இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I
Arakkonam.